# யாழ். மாவட்டத்தில் பஸ்விபத்து அதிகரிப்பு!

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ☆

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண்; 49
போன் 389

தேசிய தினசரி

மலர் 13
இதழ் 172

[illegible] ஆடி 19 ஜமாதுல் ஆகிர் 12 புதன்கிழமை (4-8-71)

JAFFNA COLLEGE UNDERGRADUATE LIBRARY -4 AUG 1971

## கவனக்குறைவான சாரதிகள் மீது "கடும் நடவடிக்கை"

யாழ்ப்பாணம், புதன்

மதுபானமருந்திய நிலையிலும், வீதிப்போக்குவரத்து விதிகளை மீறியும் கவனக்குறைவாகவும் பஸ்களைச் செலுத்தும் இ.போ. சபை பஸ்வண்டிச் சாரதிகள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாக வடபகுதி பொலிஸ் அதிபர் எச்சரித்திருக்கிறார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இ.போ. சபை வாகனங்களினால் ஏற்படும் விபத்துக்கள் அதிகரித்து வருவதே பொலிசார் இப்படி எச்சரிக்கை விடுவதற்குக் காரணமாம். கடந்த சுமார் ஆறு மாத காலத்துக்குள் மாவட்டத்தில் இலங்கைப் போக்குவரத்துச்சபை பஸ்வண்டிகள் நாற்பது விபத்துச்சம்பவங்களில் சம்பந்தப்பட்டிருக்கின்றன. புன்னாலைக்கட்டுவனில் நடந்த ஒரு விபத்தில் ஒருவர் மாண்டார். மற்றும்பலர் காயமடைந்தனர் கிளிநொச்சியில் நிகழ்ந்த விபத்தில் ஒருவர் கொல்லப்பட்டார் மற்றும்பலர் காயமடைந்து ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இ.போ.ச விபத்துக்கள் அதிகரித்து வருவதால் பஸ் சாரதிகள் போக்குவரத்து விதிமுறைகளை அனுசரித்தும் மிகக்கவனமாக பஸ்களைச் செலுத்த வேண்டுமென்று எச்சரிக்குமாறு இ.போ.ச அதிகாரிகளை பொலிசார் கேட்டுள்ளனர்.

மதுபோதையில் பஸ்களைச் செலுத்தும் சாரதிகள் பற்

(6-ம் பக்கம் பார்க்க)

# ஆகஸ்ட் 6லிருந்து புதிய விடுமுறைத் திட்டம் அமுல்!

## அவசரகால சட்டத்தின் கீழ் அரசாங்கம் பிரகடனம்

கொழும்பு, செவ்.

**பௌர்ணமி தினமாகிய ஆகஸ்ட் 6ம் திகதியிலிருந்து புதிய விடுமுறைத் திட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. அவசரகாலச் சட்டத்தின்கீழ் அரசாங்கம் இதனை இன்றுபிரகடனம் செய்துள்ளது**

7ம் 8ம் திகதிகளான சனி ஞாயிற்றுக்கிழமை ஆகிய இருதினங்களும் அரசாங்க வர்த்தக வங்கி விடுமுறை தினங்களாக இருக்குமென அரசாங்கம் அறிவித்துள்ளது அதேசமயம் ஆகஸ்ட் 5ம் திகதி முழுநேர வேலை நாளாக இருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

செனட் சபையின் தேவையற்ற தாமதத்தினாலேயே அவசர கால சட்டத்தின்கீழ் இந்தப் பிரகடனம் செய்யப்படுவதாக அரசாங்கம் இன்று விடுத்த புதிய விடுமுறைத்திட்டம் சம்பந்தமான அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அரசாங்கம் விடுத்த அறிக்கையின் முழுவிபரம் வருமாறு;

நடைமுறையிலுள்ள நோன்மதி விடுமுறைத்திட்டத்தைமாற்றி, வார இறுதியில் சர்வதேச விடுமுறைகளுக்கு அமைய சனி ஞாயிறு விடுமுறைத் திட்டத்தைக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் ஆலோசனை செய்தது. இந்தத்திட்டத்துக்கு மகாநாயக்கா தேரோக்கள், பௌத்த சங்கங்கள், பிரபல பிக்குகள், பொதுமக்கள் ஆகியோர் தமது மனப்பூர்வமான இணக்கத்தைத் தெரிவித்தனர். சனி ஞாயிறு விடுமுறைத்திட்டம் ஆட்சிமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது பிரதமர் இதுசம்பந்தமாக விளக்கத்தை அளித்தார்

புதிய விடுமுறைத்திட்டத்தை ஜூலை 1ம் திகதியிலிருந்து கொண்டுவர முதலில் முடிவுசெய்யப்பட்டிருந்தது. ஆனால் இடைக்கிடைய நேரம் குறைவாக இருந்ததால், போதிய அவகாசம் கொடுக்கும் நோக்குடன் ஆகஸ்ட் 6ம் திகதி பௌர்ணமியுடன் புதியவிடுமுறைத் திட்டத்தைக் கொண்டுவர பின்னர் முடிவு செய்யப்பட்டது

புதிய விடுமுறைத்திட்டத்துக்கான சட்டமூலம் ஜூலை 9ம் திகதி ஆட்சிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது அன்றையதினமே சட்டம்பெரும்பான்மையான வாக்குகளால் நிறைவேறியது. சாதகமாக 75 வாக்குகளும், எதிராக 2 வாக்குகளும் கிடைத்தன முக்கிய பிரதான அரசியல் கட்சிகள் இந்தச் சட்டமூலத்தை ஆதரித்தன.

### செனட்டில்

ஜூலை 11ம் திகதி செனட் சபையில் ஆட்சிமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இச்சட்டம் சமர்ப்பிக்கப்பட்டது ஜூலை 16ம் திகதி விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது செனட் சபையில் இதுவரை 6 தினங்கள் விவாதிக்கப்பட்டது. ஜூலை 16ம் 17ம் 24ம் 25ம் திகதிகளும் ஆகஸ்ட் 1ம் 2ம் திகதிகளும் விவாதிக்கப்பட்டன ஆனாலும் இச்சட்டம் செனட் சபையில் நிறைவேறும் சாத்தியமில்லை முன்பு ஆட்சிமன்றத்தில் பெரும்பான்மையான வாக்குகளால் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களுக்கு செனட்டில் நடந்த 'கதி' இந்தச் சட்டத்துக்கும் நடக்கும்போல் இருக்கிறது சகல கட்சிகளினதும் ஆதரவுடன் பெரும்பான்மையான வாக்குகளால் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களால் நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டத்தை செனட்சபை தாமதம் செய்கிறது.

### தயார்

ஆகஸ்ட் 6-ம் திகதியில் இருந்து புதிய விடுமுறைத் திட்டத்தை அமுல்நடாத்த நாடு தயாராகிவிட்டவேளையில், ஒருசில செனட்டர்களுக்காக இதனை ஒத்திவைக்க அரசாங்கம் விரும்பவில்லை, செனட் அங்கத்தவர்களின் ஒருசிலரின் வசதிக்காகவும் இச்சட்டம் கொண்டுவரப்படவில்லை,

பொதுமக்களுடன் நெருங்கிய தொடர்புள்ள சாதனங்களான பஸ் ரயில் நேரசூசிகள் புதிய விடுமுறைத்திட்டத்துக்கு ஏற்ப மாற்றம்செய்யப்பட்டுவிட்டன, இதே போன்று நீதிமன்றம்; பாடசாலை; தனியார் நிறுவனங்களின் நடவடிக்கைகளிலும் மாற்றங்கள் செய்யப்பட்டு புதிய விடுமுறைத் திட்டத்துக்கு ஏற்ப இயங்கத் தயாராகிவிட்டன; இவைகளைக் கருத்திற்கொண்டு புதிய விடுமுறைத் திட்டம் அவசரகால பிரமாணத்தின் கீழ் அதிலுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி அமுலுக்கு கொண்டுவரப்படுகிறது

பௌர்ணமி தினமான ஆகஸ்ட் 6-ம் திகதியில் இருந்து புதிய விடுமுறைத் திட்டம் அமுலுக்கு வருகிறது. 7-ம் திகதி சனிக்கிழமையும் 8-ம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் விடுமுறைதினங்களாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளது; இந்த மூன்று தினங்களும் அரசாங்க வர்த்தக வங்கி விடுமுறைதினங்களாக இருக்கும்; அதேசமயம் ஆகஸ்ட் 5-ம் திகதி முழுநேர வேலை நாளாக இருக்கும்

## மரண அறிவித்தல்

### சி. நரசிங்கம்

த. கனகசபை, கற்பகபிள்ளை ஆகியோரின் தந்தையும் பாலசிங்கம் போசனசாலை உரிமையாளர் நா. சின்னத்துரையின் மைத்துனரும் ஆகிய சி. நரசிங்கம் காலமாகிவிட்டார். அன்னாரின் பூதவுடல் 4-8-71 காலை 10 மணிக்கு புங்குடுதீவு மேற்கு சேரதீவு மயானத்திற்கு ஈமக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும் இவ் அறிவித்தலை நண்பர்களும் உறவினர்களும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
நா. சின்னத்துரை

2947

## ரப்பருடன் விலையுயர்ந்த கற்கள் கள்ளகடத்தலா?

### ஒருவாரம் தேடுதல் நடைபெறும்

கொழும்பு, புதன்

கொழும்புத் துறைமுகத்தில் நின்ற கப்பலொன்றில் ஏற்றுமதி செய்யப்பட்டிருந்த ரப்பர் திடீரென இன்று துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்பட்டது.

பலலட்சக்கணக்கானரூபா பெறுமதியான விலையுயர்ந்த கற்கள் இந்த ரப்பருடன் சேர்ந்துக் கள்ளக்கடத்தல் செய்ய முயற்சிக்கப்பட்டதாகக் கிடைத்த ஒரு தகவலைத் தொடர்ந்தே பிரதம சுங்க கலெக்டர் திரு எஸ் சிறிவர்தன மேற்பார்வையின் கீழ் இவ்வித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த தேடுதல் வேலைகள் சுமார் ஒருவாரகாலம்வரை நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது 300 தொன் நிறையுள்ள ரப்பருக்குள் இத் தேடுதலை மேற்கொள்ள வேண்டியுள்ளதாலேயே இவ்வளவு காலம் தேவைப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

சென்ற வாரம் மூன்று அமெரிக்கர்கள் விலையுயர்ந்த கற்களைக் கள்ளக்கடத்தல் செய்ய முயற்சித்தபோது தடுத்து நிறுத்தப்பட்டிருந்தார்கள். (சி பி ஏ)

மண்கும்பான் பெண்கடத்தல் வழக்கு

## விசாரணை நிறுத்தப்பட்டு எதிரிகள் விடுதலை

யாழ்ப்பாணம், புதன்

மண்கும்பான் பலாத்கார வழக்கில் எதிரிகள் ஐவரும் நேற்று விடுதலை செய்யப்பட்டனர். விசாரணை நடுவில் ஜூரிசபையினர் தனிமையில் கூடி மந்திராலோசனை செய்தபின் வழக்கை தொடருவதில் பிரயோசனமில்லை எனத் தெரிவித்தனர் இதைத்தொடர்ந்து நீதியரசர் ஏ.சி. அலஸ் எதிரிகளை விடுதலை செய்தார்.

நேற்றுக்காலை சாட்சியமளித்த 17 வயதான யுவதி நாகேஸ்வரியை எதிரி சார்பில் ஆஜரான அட்வகேட் ஜே. ஏ. பி. செரிபீம் தொடர்ந்து குறுக்குவிசாரணை செய்தார் அப்போது நாகேஸ்வரி கூறியதாவது: 1-ம் எதிரி எனக்கு தங்கத்தோடு ஒன்று வாங்கித்தந்தார் என் காதிலிருந்த தோட்டை கழற்றி விற்று காசாக்கிக்கொடுத்தார் அதன்பின் புதியதோடு வாங்கித்தந்தார்.

நீதியரசர்: ஏன் அவர் தந்த தோட்டை ஏற்றீர்? என்தோட்டை விற்றபடியால் புதிய தோடுவாங்கித்தந்தார்.

நீதி: விலைமதிக்கமுடியாத கற்பை இழந்து விட்டீர்?- ஆம்

நீதி: அதன்பின்தோட்டை ஏன் ஏற்றுக்கொண்டீர்?- அவர் என் தோட்டை கழற்றிவிட்டு, வாங்கித்தந்தார்.

வழ: உன் தகப்பனார் அறைக்கதவை பூட்டிவிட்டார்?- ஆம்

வழ: நாய்கள் குரைக்கும் சத்தம் கேட்டு திறந்து போனார்?- ஆம்

வழ: அன்று கதவு திறந்திருந்ததா?- பூட்டியிருந்தது

வழ: அன்று தகப்பனார் வெளியில்போனபோது நீரும் உமது தாயாரும் 1-ம் எதிரியும் இரவு ஓலை பற்றி திட்டம்போட்டீர்கள்? எங்கள் வீட்டுக்கு முதலாம் எதிரி வரவில்லை

வழ: அதனால் தான் அம்மா நன்றாய் வேர்க்குதென்று கதவைத் திறக்கும்படி ஐயாவிடம்

(6-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

மோட்டார் வாகனங்கள் மற்றும் சகலவிதமான யந்திரங்களுக்கும் உதிரிப் பாகங்கள் ஜேர்மனியில் பயிற்றப்பட்ட பொறியியலாளர்களின் மேற்பார்வையில் செய்துகொடுக்கப்படும். சாதர மெசின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3409

### விற்பனைக்கு

காணிகள்

ஒட்டுசுட்டானில் கொன்கிலாணிகள் முந்தையகள் கட்டுத்திட்டத்தின்கீழ் நீர்ப்பாசனத்துடன் 5 ஏக்கர் வயல் நீர்ப்பாசனக்கந்தோர் சந்திக்கண்மையில் முள்ளியவளை திவு ரோட்டில் வியாபாரஸ்தானத்திற்கேற்ற 73 பேர்ச்சஸ், நெடுங்கேணி ரோட்டில் ஒரு ஏக்கர், கற்சிலைமடுவில் ஒரு ஏக்கர் நிலங்கள். விபரங்கட்கு: 65, அரசடிவீதி, யாழ்ப்பாணம். ரெலிபோன் நம்பர்: 7020. 3444

குங்குமம்

கண்ணைக் கவரும் பல கலர்களிலும் அர்ச்சனைக் குங்குமம், மீனாட்சி குங்குமம் முதலிய பல தினிசுகள் பெற்றுக்கொள்ளலாம். எஸ். சுப்பிரமணியம் கொம்பனி, 53, காங்கேசன்துறை வீதி, 160, செட்டியார் தெரு, யாழ்ப்பாணம், கொழும்பு. 3410

### விற்பனைக்கு

யாழ்ப்பாணம் இரண்டாம் குறுக்குத்தெரு 18/2ம் இலக்கத்தில் சகல வசதிகளுடனும் அமைந்த புது வீடொன்று 2 பரப்புக்காணியில் விற்பனைக்குண்டு. மாநகரசபை குழாய்நீர் வசதியுடன் இணையும் இருக்கிறது. விபரங்கட்கு சுவாம்பிள்ளை, 25, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். 3436

### தேவை

சாரதி

தகுதிவாய்ந்த சாரதியாயும் பணியாளராகவும் கடமையாற்ற ஒருவர் தேவை. விண்ணப்பிக்கவும்: விளம்பர இல. 3446 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 3443

## கரபந்தாட்டம்

பருத்தித்துறை, செவ். வதிரி டயமண்ட் கழகத்தின் ஆதரவில் நடைபெற்றுவரும் கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் மட்டுவில் மோகனதாஸ் கழகமும், புத்தூர் விஷ்ணு கழகமும் மோதிக்கொண்ட போது மோகனதாஸ் 3: 1 ஆட்டங்களால் வெற்றியீட்டியது. இதே சுற்றுப்போட்டியில் நீர்வேலிக் கோஷ்டியும் வல்லைக் கோஷ்டியும் மோதிக்கொண்டதில் நீர்வேலி 2: 0 ஆட்டங்களால் வெற்றியீட்டியது. திரு. பி. அண்ணுச்சாமி மத்தியஸ்தம் வகித்தார்.

## வேலை விளம்பரம்

கோப்பாய் கிராமசபைத் தலைவரால் கீழ்க்காணும் வேலைகளுக்கான சீல்வைத்த கேள்விகள் ஒப்பந்தகாரரிடமிருந்து 16-8-71 காலை 10 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

1. கோப்பாய் வாரச் சந்தைக் கட்டிடம் அமைத்தல்.

2. சரவணபவானந்த வித்தியாசாலையடிக்கிணற்று வேலை.

2. ஒவ்வோர் வேலைக்கும் கட்டுப்பணமாக ரூபா25/-ம் பத்திரப்பணமாக முறையே ரூபா 10/-, ரூபா5/- கட்டப்படுடன் பெயரில் வழங்கப்படும் பத்திரத்திலேயே மனுச்செய்தல் வேண்டும்.

3. பத்திரங்கள் 14-8-71 நண்பகல்வரை வழங்கப்படும்.

வேறு விபரங்கள் கந்தோரில் அறிந்துகொள்ளலாம்.

தி. பரமானந்தராசா,
தலைவர்.
கோப்பாய் கிராமசபை அலுவலகம்,
கோப்பாய். 2-8-71. 2946

## கிளிநொச்சிப் பட்டினசபை கேள்விவிளம்பரம்

கிளிநொச்சிச் சந்தையில் இரண்டுதிறந்த கொட்டகைகள் 100 அடி நீளம் 18 அடி அகலத்தில் அமைப்பதற்கு சீல்வைத்த தனித்தனி கேள்விகள் அதற்காக வழங்கப்படும் பத்திரங்களில் 1971ம் ஆண்டு ஆவணி மாதம் 18-ந் திகதி முற்பகல் 10-00 மணிவரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஏனைய விபரங்கள் யாவும் கிளிநொச்சிப் பட்டினசபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ச. சு முருகேசு,
தலைவர்.
பட்டினசபை,கிளிநொச்சி.
பட்டினசபைஅலுவலகம்,
கிளிநொச்சி. 26-7-71.
2944

## நூல் வெளியீடு

சுழிபுரம், செவ். வழுக்கம்பரை சனசமூக நிலையத்தினர் சித்தன்கேணி ஸ்ரீ காசி கதிர்காம வேலவன் மேல் பாடப்பட்ட விருத்தங்களைக் கொண்ட நூல் ஒன்றை வருகிற வெள்ளிக்கிழமை வெளியிடவுள்ளனர். இந்நூல் நிலையத்தின் இருபத்தைந்தாவது வெளியீடாகும்

கல்வி இலாகாவினரால் நடாத்தப்பட்ட

# கரபந்தாட்ட, வலைபந்தாட்ட போட்டிகளின் முடிவுகள்

யாழ்ப்பாணம், புதன் கல்வி இலாகாவினரால் யாழ். மாவட்டப் பாடசாலைகளிடையே நடாத்தப்பட்டு வந்த கரபந்தாட்ட, வலைபந்தாட்டப் போட்டியில், சிங்கள மத்திய மகா வித்தியாலயமும், வேம்படி மகளிர் கல்லூரியும் சாம்பியன்களாக வந்துள்ளன.

சிங்கள மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிகளுக்கு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

சிங்கள மத்திய மகா வித்தியாலயத்துக்கும், வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரிக்குமிடையில் நடை

(6-ம் பக்கம் பார்க்க)

## கேள்வி விளம்பரம்

வேலைகள்

1. குராவத்தை விளிசிட்டி வீதி.

2. இலகிமைவர்கோன் குடும்பனுடையார் வீதி.

3. மைலங்காடு கொலொனிவீதி.

1. ஏழாலைக் கிராமசபைத் தலைவர் அவர்களால், மேற்படி வேலைகளுக்கான சீல்வைத்த கேள்விப்பத்திரம். 1971ம் ஆண்டு ஓகஸ்ட் மீ 18-ந் திகதி காலை 9-00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

2. கேள்விகள் உத்தியோக பூர்வமான பத்திரங்களில் எழுதிக் கொடுக்கப்படவேண்டும். அப்பத்திரங்கள் இக்காரியாலயத்தில் 16-8-71-ந் திகதி 2-45 பி.ப வரை ஒவ்வொருவேலைக்கும் தலா ரூபா 50/- கேள்விப் பணமாகவும், ஒவ்வொரு வேலைக்கும் தலா ரூபா 5/- பத்திரப்பணமாகவும் கட்டப்படுவதன்மேல் பெற்றுக் கொள்ளலாம். (பத்திரப் பணம் திருப்பிக் கொடுபடமாட்டாது)

3. மேற்கொண்டு விபரங்களை இக்காரியாலயத்தில் அறிந்து கொள்ளலாம்.

தலைவர்
கிராமசபை
2945 ஏழாலை

## ஓட்டப்போட்டியில் வெற்றிபெற்றோர்

தாவடி, செவ். கொக்குவில் இந்துக் கல்லூரியால் நடாத்தப்பட்ட 5 மைல் மரதனோட்டப் போட்டியில் செல்வன் த. மகாலிங்கம் முதலாவது இடத்தைப் பெற்றார் இரண்டாவதாக செல்வன் புவனேஸ்வரனும் மூன்றாவதாக செல்வன் சிவனேஸ்வரனும் நான்காவதாக செல்வன் ஆனந்தசிவதாசும் வெற்றி பெற்றனர்.

ஹொக்கிப்போட்டி:

## சென். ஜோன்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், புதன் யாழ்ப்பாணப் பாடசாலை ஹொக்கி விளையாட்டுச் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் ஹொக்கிச் சுற்றுப்போட்டியில் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ் மத்திய கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் இருபிரிவுகளிலும் சென். ஜோன்ஸ் கல்லூரி வெற்றி பெற்றது.

'ஏ' பிரிவுப் போட்டியில் 4-1 கோல்களாலும் 'பி' பிரிவில் 4-0 கோல்களாலும் சென். ஜோன்ஸ் வெற்றி பெற்றது.

சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் போட்டி நடைபெற்றது. (தே. நி)


**ராஜா** யாழ்ப்பாணம்
தினசரி 3 காட்சிகள்
பத்மினி-பிரான்-பேபிராணி
நடித்த
**அவ்ரூட்**
(Aurat) ஹிந்தி

**MANOHARA- Jaffna**
Daily
4-45, 7-00&9-45 p.m.
Christopher Lee
in
TASTE THE BLOOD OF DRACULA
(Color - Adults only)

**ஸ்ரீ காலிங்கன்**
இணுவில்
தினசரி பி.ப. 6 30, 10-00
ஜெய்சங்கர் - பாரதி
நடித்த
**நான் யார் தெரியுமா**

**நாகம்ஸ்சினிமா**
சுன்னாகம்
2-வது வாரம்
தினசரி, 6-30, 9-45
ஏ.வி. நாகராஜன்- வரலக்ஷ்மி
நடித்த
**ஏழு பிள்ளை நல்லதங்காள்**
மாலை 4-30 மட்டும்
TO TRAP A SPY
(சண்டைப்படம்)

**REGAL - Jaffna**
Daily 5-15&7-15 p.m.
Prepoya Poyadays 10-30a.m
Dean Martin
in
THE AMBUSHERS
தினசரி பி. ப 2-00இரவு 9-45
சிவாஜி-ராஜசு-பாலையா
நடித்த
**நானே ராஜா**

இன்றுமட்டும்
**வெலிங்டன் சினிமா**
மானிப்பாய்
பி ப 2-30, 6-30 10-00
சிவாஜி-தேவிகா
நடித்த
**ஆண்டவன் கட்டளை**

**ராணி** (யாழ்ப்பாணம்)
பி.ப. 2 30 இரவு, 6-30, 10-00
சுந்தரராஜன் - நாகேஷ்
சௌகார்ஜானகி - லக்ஷ்மி
**கஸ்தூரிதிலகம்**

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
4-8-71 இன்று முதல்
எம். ஜி. ஆர். - வாணிஸ்ரீ - நம்பியார்
அசோகன், ஜோதிலட்சுமி, நாகேஷ், மனோரமா
ஓ. ஏ. கே. தேவர், ராமராவ்
நடித்த
புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அளிக்கும்
தோமஸ் பிச்சர்ஸ்
**தலைவன்**

இந்தியாவில் பல நகரங்களிலும், ஈழத்தின் தலைநகர் கொழும்பிலும் 25 வாரங்களுக்கு மேல் காட்சியளித்துப் பெரும் சாதனையை நிலைநாட்டிய வெற்றிச் சித்திரம்.
**லிடோ** யாழ்நகர்
தினசரி காலை10-30, பி ப 2-30, மாலை6-30, இரவு10-00
சாதனா - சஞ்ஜே
பால்ராஜ்ஸானி - சப்னம்
நடித்த
**ஏக்பூல்தோமாலி**
(ஹிந்தி)
(ஈஸ்ட்மன் கலர்)

**வெலிங்டன்**
(யாழ் நகர்)
தினசரி மூன்று காட்சிகள்
★ சிவாஜி ★ வாணிஸ்ரீ
★ முத்துராமன் ★ சோ
நடித்த முழுநீள ஹாஸ்யச் சித்திரம்
**நிறைகுடம்**
திரைக்கதை - வசனம் C

# 2 மணிநேர சிரமத்தின் பின் சந்திரக்கலம் கழற்றப்பட்டது

## ஒருவருடத்துக்கு தகவல் அனுப்ப ஒரு சிறுகிரகம்

### அண்டவெளியில் வோர்டன் நடப்பார்; அப்பலோ வீரர்கள் நிலவை சுற்றுகின்றனர்

ஹூஸ்டன், ஆகஸ்ட் 3

**சந்திரத்தரையிலிருந்து புறப்பட்ட வீரர்கள் டேவிட்ஸ்கொட்டும் ஜேம்ஸ் இர்வினும் தாய்க்கலத்திலுள்ள அல்வோர்டனுடன் சேர்ந்து கொண்டு இப்பொழுது சந்திரனைச் சுற்றிய பாதையில் வலம் வந்துகொண்டிருக்கிறார்கள்,**

**மேலும் இருதினங்கள் இவ்வாறு சந்திரனைச் சுற்றிவிட்டு வியாழக் கிழமையன்று அவர்கள் பூமியை நோக்கிப் புறப்படுவார்கள்.**

சந்திரத்தரையில் தமது மூன்றுவது சாரிப்பணத்தையும் இதரப் பணிகளையும் முடித்துக்கொண்டு 'பால்கன்' என்ற தமது நிலாவாகனத்தை மேலே கிளப்பி சுந்த இரவு சுமார் 11 மணிக்கு சற்று முன்பதாக ஸ்கொட்டும் இர்வினும் புறப்பட்டார்கள். கலம் மிகவும் அழகாக மேலே எழுந்து சந்திரப்பாதையில் திரும்பி தாய்க்கலத்துடன் இணைந்து கொண்டது. ஆனல் இரு கலங்களும் இணைந்து கொண்டபின் அதனைக் கழட்டிவிடுவதில் சிரமம் ஏற்பட்டது. கலங்களை இணைக்கும் குழாய்போன்ற பகுதியில் காற்றழுத்தம் ஏற்பட்டதே இதற்குக் காரணம். குழாயில் ஏற்பட்ட கசிவு காரணமாக இது நிகழ்ந்ததாக அந்தக் கசிவை வீரர்கள் திருத்தினார்கள். என்றாலும் சந்திரக்கலத்தைக் கழற்றிவிடுவதில் இரண்டு மணி நேரம் தாமதம் ஏற்பட்டது. சந்திரக்கலம் இணைக்கப்பட்ட நிலையிலேயே தாய்க்கலம் இரண்டு தடவைகள் சந்திரனைச் சுற்றி வந்தது. பின்னர் நிலைமையை கட்டுப்பாட்டு நிலையத்தினர் மிகக் கவனமாகப் பரிசோதித்த பின்னர் சந்திரக்கலத்தைக் கழற்றிவிடும்படி வீரர்களுக்கு உத்தரவிட்டனர். அதைத்தொடர்ந்து சந்திரக்கலம் வெற்றிகரமாகக் கழட்டிவிடப்பட்டது. பூமிக்குத் திரும்பும் விசைகளை செலுத்துமுன் மேலும் இருநாட்கள் அவர்கள் சந்திரனை வலம்வரவிருக்கிறார்கள் அப்பொழுது சந்திரனின் மேற்பரப்பையும் சுற்றுவட்டத்தையும் படம்பிடிப்பார்கள். பூமியை நோக்கிப் புறப்படும்போது வோர்டன் அண்டவெளியில் ஒருமணிநேரம் நடப்பார். அப்பொழுது தாய்க்கலத்தின் விஞ்ஞானக் கருவிகள் உள்ள பேழைக்குச் சென்று அதன் நிலைமையை ஆராய்வதுடன் அதிலுள்ள புகைப்படச் சுருள்களையும் எடுத்துவருவார். இந்தப் பேழை பூமிக்கு வீரர்கள் இறங்கும்போது எரிந்துபோய்விடும். அதற்கு முன்பதாக சந்திரனை வலம்வரக்கூடியதாக சிறுகிரகம் ஒன்றினை அவர்கள் பறக்கவிடுவார்கள். இது சந்திர சூழ்நிலையில் ஏற்படும் நிகழ்ச்சிகளை ஒரு வருட காலத்துக்கு பூமிக்கு தெரிவித்துக் கொண்டிருக்கும்.

தாய்க்கலத்திலிருந்து சந்திரக்கலத்தைக்கழற்றிவிடும் நிகழ்ச்சி இன்று காலை 6-35 மணிக்கு இடம்பெற்றது. இந்தக் கலத்தை பூமியிலுள்ள கட்டுப்பாட்டு நிலையத்தினர் தொலைவிசை ஒன்றின்மூலம் இயக்கி சந்திரனில் விழும்படி செய்வர்.

### 200 ருத்தல் மண்மாதிரி

சந்திரத்தரையில் மூன்று தடவைகள் நடமாடியதன் மூலம் சுமார் 200 ருத்தல் எடையுள்ள மண்மாதிரிகளையும் சந்திரப் பாறைகளையும் வீரர்கள் சேகரித்துக் கொண்டு வருகிறார்கள்.

அடுத்த சனிக்கிழமையன்று பசபிக்சமுத்திரத்தில் அவர்கள் வந்து இறங்குவர்.

### வெங்காயச் செய்கை விஸ்தரிப்பு

கோட்டை, செவ்வாய்

வழமையாக வெங்காயம் பயிரிடப்படும் இடங்கள் தவிர்ந்த ஏனைய பகுதிகளிலும் வெங்காயம் பயிரிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றன

அனுராதபுரம், பொலநறுவை ஆகிய இடங்களில் 4000 ஏக்கர் நிலப்பரப்பில் வெங்காயம் உற்பத்தி செய்ய விவசாய இலாகா நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது.

## சோவியத் தூதருக்கு வெளியேற உத்தரவு

### சூடான் அதிபர் நடவடிக்கை

கார்டூம், ஆக. 3

சூடானிலுள்ள சோவியத் தூதர் ஜெனரலை 48 மணி நேரத்துக்குள் வெளியேறும்படி சூடான் அதிபர் ஜெனரல் நிமேரி உத்தரவிட்டிருக்கிறார்.

பல்கேரிய தூதுவரையும் வெளியேறும்படி ஜெனரல் நிமேரி உத்தரவிட்டிருக்கிறார்.

அண்மையில் சூடானில் ஏற்பட்ட புரட்சியின்போது புரட்சிவாதிகளுடன் கம்யூனிஸ்ட் நாடுகளின் ராஜதந்திரிகள் உறவுகொண்டிருந்ததாக சூடான் குற்றஞ்சாட்டியிருக்கிறது.

சூடானிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள் மீது ஜெனரல் நிமேரி எடுத்தநடவடிக்கைகளை சோவியத் பத்திரிகைகள் வெகுவாகக்கண்டித்து வந்தன. இந்தக்கண்டனங்களை உடனடியாக நிறுத்தும்படி ஜெனரல் நிமேரிகேட்டிருந்தார். மாஸ்கோவிலும், பல்கேரியாவிலுமிருந்த தூதர்களையும் அவர் திருப்பி அழைத்திருந்தார் இப்பொழுது சூடானிலுள்ள இந்த இரு நாடுகளின் ராஜதந்திரிகளையும் வெளியேறும்படி உத்தரவிட்டிருக்கிறார்.

#### எகிப்து ஆதரவு

சூடான் அரசு புரட்சியாளர்களுக்கெதிராக எடுத்துள்ள நடவடிக்கைகளை எகிப்திய அதிபர் ஆதரித்திருக்கிறார்' சூடானின் உள்நாட்டு விவகாரங்களில் எகிப்து தலையிடமாட்டாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### உபகரணம் நன்கொடை

மட்டுவில், செவ்.

மட்டுவில் மகாவித்தியாலயத்திற்கு ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் சார்பில் யூ என் ஐ சி எவ் ஸ்தாபனம், யூனிசேவ் விவசாய உபகரணங்களை நன்கொடையாகக் கொடுத்துதவியுள்ளது

இந்த விவசாய உபகரணங்களை மட்டுவில் மகாவித்தியாலய விவசாயப் போதனாசிரியை திருமதி பவளம் முத்தையா விரைவில் பெற்றுக்கொள்ளவிருக்கிறார். இந்த விவசாய உபகரணங்களை இலவசமாக தந்துதவியதற்காக மட்டுவில் மகாவித்தியாலய பெற்றோர்-ஆசிரியர் சங்கம் நன்றி செலுத்தும் பிரேரணையை நிறைவேற்றியது. அதிபர் திரு. பொ. சபாரத்தினம் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது

## இந்த ஆண்டுக்குள் ஐ. நா. வில் செஞ்சீனு! யு. எஸ். ஆதரிக்குமாம்

வாஷிங்டன், ஆக. 3

கம்யூனிஸ்ட்சீனவை ஐ. நா. பொதுச்சபையில் அனுமதிக்கக் கோரும் தீர்மானத்தை அமெரிக்கா இந்த வருடம் ஆதரிக்குமாம்.

ஆனல் (தேசிய சீன) தைவானை வெளியேற்றுவதற்கு எந்த நடவடிக்கையையும் அமெரிக்கா எதிர்க்கும் என்றும் ராஜாங்க அமைச்சர் ரோஜர்ஸ் தெரிவித்திருக்கிறார்.

இரண்டு சீனுக்களையும் ஐ நா. வில் அனுமதிப்பதற்கு அமெரிக்கா சம்மதமாய் இருக்கின்றது. ஆனல் தைவானுடன் ஐ. நா. வில் அமர்வதற்கு செஞ்சீனு விரும்புமா என்பது தெரியவில்லை, இதற்கிடையில் ஐ. நா. சபையிலிருந்து தன்னை வெளியேற்ற எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு எதிராக தைவான் ஆதரவுதிரட்ட முனைந்திருப்பதாகவும் கூறப்படுகின்றது.

#### பிரி. மந்திரி சீனு செல்ல விருப்பம்

பிரிட்டிஷ் வெளிநாட்டு அமைச்சர் திரு. அலெக்டக்ளஸ் ஹியும் செஞ்சீனுவுக்கு விஜயம்செய்யத்தாம் மிகவும் விருப்பம் கொண்டிருப்பதாகத் தெரிவித்துள்ளார். சந்தர்ப்பம் கிடைக்கும்போது செஞ்சீனுவுக்குத்தாம் போக விருப்பதாக திரு ஹியும் தெரிவித்துள்ளார்.

## ஐ. நா. பார்வையாளர்களை இந்தியாபலமாகஎதிர்க்கிறது

புதுடில்லி, ஆக 3

கிழக்கு வங்கப் பிரச்னை காரணமாக இந்தியாவின் எல்லையில் ஐ. நா. பார்வையாளர்களை நிறுத்திவைக்கும் யோசனையை இந்தியா முற்றாகவே நிராகரித்துவிட்டது.

இந்திய எல்லையில் ஐ நா பார்வையாளர்களை நிறுத்துவதால் பிரச்னை திசை திருப்பப்பட்டுவிடும் என்றும் பாகிஸ்தான் ராணுவ அட்டூழியங்களின் காரணமாக அகதிகள் இந்தியாவுக்குள் வந்திருக்கிறார்கள் என்பது போய் இப்பிரச்னை இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையிலான ஒன்றாகக் கருதப்பட்டுவிடுமென்று இந்தியா தெரிவித்துள்ளது

ஐ. நா பார்வையாளர்களை இந்தியப் பகுதிகளில் நிறுத்திவைக்கும் நடவடிக்கையை நட்புக்குரியதாக இந்தியா கருதமுடியாதென அறிவித்துள்ளது

### சமயதீட்சை

வேலணை செவ்வாய்

வேலணை மேற்கில் 53 பெண் பிள்ளைகள் சமய தீட்சை பெற்றனர். ஒருவைத்தறி நிலையத்தைச் சேர்ந்த இப் பெண்களுக்கு சரணவாயைச் சேர்ந்த சிவஸ்ரீ ஐ. திருஞானசம்பந்தக் குருக்கள் தீட்சையளித்தார்.

நிலைய உரிமையாளர் திரு நா. வீரசிங்கம் தமது சொந்தச் செலவில் இச்சடங்கினை நடத்தி வைத்தார்.

விமானவிபத்து எதிரொலி

## ஜாப். பாதுகாப்பு மந்திரி ராஜினமா!

டோக்கியோ, ஆக 3

விமான விபத்து ஒன்றில் 162 பிரயாணிகள் மரணமானதைத் தொடர்ந்து ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சர் தமது பதவியை ராஜினமா செய்துள்ளார். இவரது ராஜினமாவை ஜப்பானிய பிரதம மந்திரி ஏற்றுக்கொண்டுவிட்டார்.

சமீபத்தில் ஆகாயத்தில் போர் பயிற்சி விமானம் ஒன்றும் பிரயாணிகள் விமானம் ஒன்றும் மோதிக்கொண்டன இதில் 162 பேர் பலியானூர்கள். போர் பயிற்சி விமானத்தின் விமானி பரசூட் மூலம் தப்பிவிட்டார். இவர் மீது வழக்குத் தொடரப்படவிருக்கின்றது. இந்தச் சம்பவத்துக்கான பொறுப்பை தாம் ஏற்றுக்கொண்டு பாதுகாப்பு அமைச்சர் ராஜினமா செய்துள்ளார். விமானப்படைத் தளபதியும் தமது ராஜினமாவைக் கொடுத்திருப்பதாகத் தெரிகின்றது.

## 'நாட்டின் அபிவிருத்தி வேலைகளுக்கு இனப் பாகுபாடு காட்டாமல் ஒத்துழைப்புத் தாரீர்'

### தெல்லிப்பழையில் அமைச்சர் இரத்னாயக்கா

மாவிட்டபுரம், செவ். விளையாட்டமைச்சர் என்ற முறையில் கிராமங்களிலும், நகரங்களிலும் இன பாரபட்சமின்றி விளையாட்டுத்துறையை வளர்க்க வேண்டிய பெரும்பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த பொறுப்பை நிறைவேற்ற சகல இன மக்களும் எமக்கு ஆதரவு தரவேண்டும் அதே நேரத்தில் எமது அமைச்சு சகல இனமக்களுக்கும் உதவி வழங்கத்தயாராக உள்ளது.

இவ்வாறு தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி பரிசளிப்பு விழாவில் நேற்று பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய விளையாட்டு அமைச்சர் திரு கே பி ரத்னாயக்கா கூறினார். தமிழில் அவர் பேசினார். கல்லூரி அதிபர் திரு மா மகாதேவன் தலைமையில் நடந்த இவ்விழாவில் அமைச்சர் தொடர்ந்து பேசுகையில் நாளுக்கு நாள் விளையாட்டுத் துறையில் முன்னேறி வரும் யாழ் நகரில் உள்ள விளையாட்டு வீரர்களுக்கும் விளையாட்டுக் கழகங்களுக்கும் அரசின் சார்பில் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

அமைச்சர் ரத்னாயகா பேசியதாவது: நாட்டில் வேலையில்லாப் பிரச்சினை, வீடில்லாப்பிரச்சினை பொருளாதாரப்பிரச்சினை போன்ற பல பிரச்சினைகள் உருவெடுத்துள்ள இந் நேரத்தில் விளையாட்டுத்துறைக்கு ஏன் பல லட்சம் ரூபா பணம் ஒதுக்கப்படுகிறது? ஏன் இதற்கு ஒதுக்கவேண்டும் என்ற கேள்விகள் உருவெடுக்கின்றன. இன்றுள்ள மாணவன் வருங்காலத்தில் பெரிய மனிதனாகும்போது தன் வாழ்க்கையை நல்ல முறையில் நடத்த பல தொழிலும் ஈடுபட வேண்டும் பல தொழிலும் ஈடுபட பலசாலிகளாகத் திகழவேண்டும் விளையாட்டின் மூலம் மாணவர்களைப் பலசாலிகளாக்கவே விளையாட்டுத்துறை கவனிக்கிறது.

இந்நாட்டு மக்கள் இனம் மொழி மதம் ஆகியவற்றில் வேறுபாடாக இருக்கலாம் ஆனால் விளையாட்டுத்துறையில் ஈடுபடுபவரிடையே இப் பாகுபாடு மறைந்து விடுகிறது விளையாட்டுகள் ஒவ்வொரு இனத்துக்கும் வெவ்வேறாக அமைந்திருக்கவில்லை சகல இனத்தவருக்கும் ஒரேமுறையில் தான் விளையாட்டுகள் அமைந்துள்ளன

நாம் அனைவரும் ஈழத்தாயின் பிள்ளைகள் என்ற நிலையில் வாழ இந்த விளையாட்டுத்துறை [illegible] பெருதவியாக அமைந்துள்ளது.

நாட்டில் [illegible] ஏற்படுத்தப்படும் எந்த அபிவிருத்தி வேலைகளுக்கும் இனப்பாகுபாடு காட்டி [illegible] அதற்கு தடையாக இல்லாமல் நாட்டை முன்னேற்ற சகல இனமக்களும் ஒத்துழைப்பு தரவேண்டும் என்று அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

அதிபர் மா மகாதேவன் பேசுகையில் இன்று கல்வித் துறையில் மாணவர் காட்டும் ஆர்வம் போல் விளையாட்டுத்துறையில் காட்டுவதில்லை. வெறும் கல்வி எப்படி ஒரு மாணவருக்கு அவசியமோ அதேபோல விளையாட்டும் முக்கியமென்றும் சொன்னார்.

விளையாட்டமைச்சர் நேற்று மாலை பலாலி விமான நிலையத்தில் வந்திறங்கிய சமயம் அவருக்கு அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது.

---

## சனசமூக நிலையங்களின் சமாஜ கோரிக்கை

அரியாலை, செவ்.

"1962-ம் ஆண்டுதொடக்கம் இதுவரைகாலமாக நன்கொடை வழங்கப்படாத சனசமூகநிலையங்களுக்கு விரைவில் நன்கொடை வழங்கவேண்டும்' எனக் கோரும் தீர்மானம் யாழ்ப்பாண மாவட்ட சனசமூகநிலையங்களின் சமாச பொதுச்சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. யாழ் மத்தியகல்லூரி மண்டபத்தில் சமாதான நீதவான் திரு. வ. சுப்பையா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

0 மின்சாரம் பாவிக்கும் நிலையங்களுக்கு இலவசமாக அல்லது மத ஸ்தாபனங்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் போல் வழங்கப்பட வேண்டும்.

0 வானொலிப் பெட்டிகள் இல்லாத நிலையங்களுக்கு குறைந்தவிலையில் வானொலிப் பெட்டிகள் தவணை முறையில் வழங்கப்பட வேண்டும். சிறந்த நிலையங்களின் செயலாளர்களுக்கு சமூகசேவைப் பயிற்சி வகுப்புகள் அரசாங்கம் நடத்தவேண்டும். இதில் முதன்மையான ஊழியர்கள் வெளிநாட்டிற்கு விசேஷ பயிற்சிக்கு அனுப்பப்படவேண்டும்.

0 அரசாங்கப் பத்திரிகைகள் மற்றும் திரைப்படக் காட்சிகளை சனசமூகநிலையங்களுக்கு உதவவேண்டும் காரியாதிகாரி பிரிவுகள் தோறும் சனசமூகநிலையங்களில் [illegible] விழா, விளையாட்டுப்போட்டிகள் நடத்துவது! யாழ் நகரில் ஆண்டுவிழாவுடன் இறுதிப்போட்டி விழாவும் வைப்பது. இவ்விழாவிற்கு உள்ளூராட்சிமன்ற பொது நிர்வாக உள்நாட்டு மந்திரியை அழைப்பது.

## தென்மராட்சி ஆசிரியர்கள் நிறைவேற்றிய தீர்மானங்கள்

உடுப்பிட்டி, செவ்வாய் "ஆசிரியர்கள் உரிமைகள் பெறவேண்டுமானால், ஆசிரியர்கள் தொழிற்சங்கங்களின் உறுப்பினர்களாக இருப்பதோடு தமது உரிமைகள் பற்றிய சிந்தனையுடனும் விழிப்புடனும் செயலாற்றவேண்டும். சகல உத்தியோகத்தர்களுக்கும் ஏற்றபக்கத்துணையாக பொது உறுப்பினர்கள் உற்சாகமாக இருத்தல்வேண்டும். ஆசிரியர்களிடையே இன்று நிலவுகின்ற மிக அதிகமான தரங்கள் வருந்தற்றவை. பிரிவினைக்கு வழிகோலுபவை. இத்தரங்களைக் குறைப்பதற்கான தேசிய ஆசிரியர் சங்கத்தின் கோரிக்கை கல்வி அமைச்சினால் கருத்திற்கெடுக்கப்பட்டு வருகின்றது"

மேற்கண்டவாறு தென்மராட்சி ஆசிரியர் சங்கஆங்குரார்ப்பணக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையில் தேசிய ஆசிரியர்சங்கப்பிரதிநிதி திரு. வி சிவசுப்பிரமணியம் குறிப்பிட்டார். உசன் இராமநாதன் மகாவித்தியாலய பதிலதிபர் திரு வே க நடராசா தொடக்கவுரை நிகழ்த்தினார்.

வடமாகாண ஆசிரியர்சங்கச் செயலாளர் திரு சபா நடேசன் வடமாகாண ஆசிரியர் சங்கத்தின் புதிய அமைப்பு விதிகளின் நோக்கங்கள் பற்றி விளக்கினார். பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

"அதிபர்கள், கல்வி பயிலுனர்கள் முதலான பதவிகளுக்கு பதில் நியமனங்கள் நடைபெறும்போது, ஆசிரியர்களின் கல்வித்தராதரம் நிர்வாகத்திறன் போன்றவற்றுடன் அவர்களின் சேவை மூப்பையும் முக்கிய கவனத்திற் கெடுக்கவேண்டும்;

ஆசிரியர்களின் சம்பளங்களை கணிசமான அளவு உயர்த்தும் வரையிலும். அவர்களின் குறைகளையும் முறையீடுகளையும் களைவிக்கும்வகையில் ஆசிரியர்களின் பிரதிநிதிகள் இடம்பெற்ற கல்விச்சேவை ஆணைக்குழு செயற்படும் வரையிலும், கல்வி அமைச்சினால் அண்மையில் அனுப்பப்பட்ட 202 இலக்க சுற்றுநிருபம் அமுலாவதை நிறுத்திவைக்கவேண்டும்.

இந்தியாவுக்குச் சென்று நான்குவருட காலம் பயிற்சி பெற்று சங்கீதபூஷணத் தேர்வில் சித்தியெய்தியவர்களுக்கும், ஓராண்டு பயிற்சிபெற்று இசைமணித் தேர்வில் சித்தியெய்தியவர்களுக்கும் இப்போது சமசம்பளம் வழங்கப்படுகிறது. சங்கீதபூஷணதராதரம் உடையவர்களுக்குப் பட்டதாரிகளின் சம்பள விகிதம் அளிக்கப்படல் வேண்டும்.

'இலங்கையிலுள்ள ஏதாவதொரு பயிற்சிக்கலாசாலையில் பயிற்சி பெற்றபின் பல்கலைக்கழகப் பட்டத்தைப் பெற்றுச் சேவையிலுள்ள ஆசிரியரனைவருக்கும் சம்பள ஏற்றங்களுடனான பட்டதாரிச்சம்பளம் வழங்கப்படல் வேண்டும். அத்துடன் படிப்பு லீவில் சென்றவர்கட்கும், செல்லாதவர்களுக்குமிடையிலுள்ள தற்போது நிலவுகின்ற வேறுபாடுகள் நீக்கப்படவேண்டும். இக் குறிப்பிட்ட பிரிவினர் புதிய ஒழுங்குபடுத்தலின்கீழ் பயிற்றப்பட்ட பட்டதாரிகளின் பிரிவில் கணிக்கப்பட வேண்டும்.

சாதாரண ஆசிரியபயிற்சியுடன் விசேஷ அல்லது உயர்தர ஆசிரிய பயிற்சி பெற்ற ஆசிரியர் அனைவருக்கும் இரண்டுவருட முந்திய சேவைக்கு ஒரு படியுயர்ச்சி வீதம் படியுயர்ச்சி மாற்றம் வழங்கப்படவேண்டும் அத்துடன் அவர்கள் விசேட ஆசிரியர் பயிற்சியிற் சித்தியடைந்து வெளியேறும் போது முதலாம் வகுப்புத் தராதரப் பத்திரம் வழங்கப்படவேண்டும்'

---

## கைமோசக் கொலை 3வருடக் கடுழியம்

யாழ்ப்பாணம், புதன் அரியாலை கொலை வழக்கில் எதிரி கைமோசக்கொலைக் குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து நீதியரசர் எதிரிக்கு 3 வருட கடுழிய சிறைத் தண்டனை விதித்தார்

இவ்வழக்கில் அரியாலையில் 70ம் ஆண்டு ஜூன் மாதம் 4ம் திகதி குருநாதன் சின்னத்தம்பி என்பவர் குருநாதன் கந்தையா வைக் கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிர்சார்பில் அட்வக்கேட் எஸ் நாகரசா புறக்டர் ஆர் விஸ்வநாதன், புறக்டர் எஸ் பாலசிங்கம் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார். எதிர்க்காக அரசாங்கத்தால் வழக்கறிஞர் வி மயில்வாகனம் நியமிக்கப்பட்டிருந்தார் முடிக்குரிய தரப்பில் அட்வக்கேட் பூபாலசிங்கம் ஆஜரானார்,

எதிரி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு நாகரசா எதிரிக்குக் கருணைகாட்டும் படி கோரினார்.

---

### ஆசிரியர் சங்கம்

பருத்தித்துறை. செவ் வடமாகாண ஆசிரிய சங்கத்தின் 56 வது வருடாந்தப் பொதுக்கூட்டம் இம் மாதம் 15-ம் திகதி பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவிருக்கிறது. சங்கத் தலைவர் திரு கே மாணிக்க சிவம் தலைமையில் நடக்கவிருக்கும் இக்கூட்டத்தில் பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்படவுள்ளதாகத் தெரிகிறது.

......

## ஆசிரியர் சம்பளம்

யாழ்ப்பாணம், புதன் வடமாநிலத்திலுள்ள சகல பாடசாலைகளுக்கும் ஜூலை மாதச் சம்பளம் 20-ம் திகதியே கிடைக்கப் பெற்றதாக அறிவிக்கப்படுகிறது.

## 'மாணவர்கள் பல தொழில்களை பயில வேண்டும்'

யாழ்ப்பாணம், செவ் இன்று கல்லூரிப் படிப்பை முடித்துக் கொண்டு வெளியேறும் மாணவர்களால் மண்வெட்டி பிடித்து வேலை செய்ய முடியாமல் உள்ளது. இது வேதனைப்படக்கூடியது. வாழ்க்கையை நல்ல முறையில் அமைத்துக் கொள்வதற்கு மாணவர்கள் பல தொழில்களைப் பழகியிருக்க வேண்டும்."

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தின் விளையாட்டு மைதான புனரமைப்பு வேலைகள் சிரமதானம் மூலம் ஆரம்பிக்கப்பட்டபோது நடைபெற்ற வைபவத்தில் கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் திரு ஆர் என் நடராசா மேற்கண்டவாறு கூறினார். சிரமதான வேலைகளை யாழ்நகர மேயர் திரு அல்பிரட் துரையப்பாவும் வட்டார உறுப்பினர் திரு தம்பு கந்தையாவும் ஆரம்பித்து வைத்தனர். வித்தியாலய அதிபர் திரு ஆர் செல்வராசாவும் உரையாற்றினார்.

---

### இலவச வெளியீடு

யாழ்ப்பாணம். செவ். கொழும்பு — கதிர்காம யாத்திரிகர் தொண்டர்சபை அருணகிரிநாத சுவாமிகளருளிய கந்தரநுபூதி நூலை இலவசமாக அச்சிட்டு வெளியிட்டுள்ளது இந் நூலை எல்லோரும் படித்து இறைவன் அருளைப் பெறவேண்டுமென்ற நல்நோக்கோடு இலவசமாக வெளியிட்டுள்ளது.

மேற்படி சபையின் ஆதரவில் புலவர் கருணாலயபாண்டியனார் சமய வகுப்புகளை நடாத்தினார். அவ்வகுப்பு நேரத்தில் கந்தரநுபூதிப் பாடல்களுக்குப் புலவர் உரைத்த கருத்துரைகளும், சில குறிப்புகளும் இதில் சேர்க்கப்பட்டுள்ளன.

### விசர்நாய்த்தொல்லையாம்

மட்டுவில். திங்கள் மட்டுவில் பகுதியில் விசர் நாய்களின் தொல்லை எல்லை மீறியுள்ளது. இப்பகுதிச் சிறுவர்கள் சிலரை விசர் நாய்கள் கடித்துள்ளன. அவர்கள் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வருகிறார்கள்.

இந்த விசர்நாய்களை ஒழிக்கும் முயற்சியில் இப்பகுதி வாலிபர்கள் ஈடுபட்டுள்ளனர்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

புதன் 4—8—71

(செய்திகள்: காலை 6-30, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

844 மீ. அல்லது 61 மீ.

காலை 6-00 நாதாஞ்சலி, 6-10 சைவநற்சிந்தனை, 6-15 இஸ்லாமிய நற்சிந்தனை 6-20 பக்திப்பாடல்கள், 7-00 மெல்லிசை, 7-30 திரை கானம், 7-45 இசைவேளை, 8-00 இன்னாமியநேரங்கள்.

844 மீ. அல்லது 49 மீ.

பகல் 12-00 தொழிலாளர் வேட்டலை, 1-00 கதம்ப இசை.

844 மீ. அல்லது 61 மீ.

மாலை 4-30 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 ஓடி விளையாடு பாப்பா. 5-45 கல்விச்சேவை 6-10 இடைவேளை இசை.

இரவு 6-15 புல்லாங்குழலும் வீணையும், 6-30 கிராமியப்பாடல்கள், 7-00 பழஞ்சுவைகள் 7-15 நானாவாத்தியக்கச்சேரி, 7-45 ஐ நா சித்திரம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 விஞ்ஞான உரை 9-40 பாட்டு 10-30 செய்தித்தொகுப்பு.

---

### புனருத்தாரணம்

மட்டுவில், திங்கள் சாவகச்சேரி வாரிவளநாதர் சிவன்கோவில் புனருத்தாரண வேலைகள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மகாகும்பாபிஷேகவிழா இம்மாத நடுப்பகுதியில் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது

## சங்கக் கிளை நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், புதன் அரசாங்க எழுதுவினைஞர் சங்க யாழ் கிளையின் 10 வது ஆண்டுப் பொதுக்கூட்டம் யாழ் பழையகச்சேரி வளவுக்குள் உள்ள கிளைச் சங்கத்தின் பணிமனையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் தாய்ச் சங்கத்தின் தலைவர் திரு செ. கோடீஸ்வரன் 'பங்குபற்றி உரையாற்றினார்.

பின்வருவோர் புதுவருட அலுவலர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர் திரு க சுந்தரலிங்கம் உபதலைவர்கள் திரு க. திருநாவுக்கரசு, திரு செ. துரைசிங்கம் செயலாளர்: திரு செ. பஞ்சலிங்கம், துணைச் செயலாளர் திரு க மாணிக்கவாசகம் பொருளாளர் திரு செ இராசலிங்கம்.

பத்து உறுப்பினர்களைக் கொண்ட செயற்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

---

## கூட்டுறவுபற்றி எழுத்துப் போட்டி

மானிப்பாய், செவ்வாய் வடபகுதி ஐக்கிய தேற்பார்வைச் சபை அனைத்திலங்கைக் கூட்டுறவுத் தினத்தையொட்டிப் பாடசாலை மாணவருக்கும் பிறருக்குமான பல்வேறு எழுத்துப்போட்டிகளை நடாத்தவிருப்பதாக அறிவித்துள்ளது கதை, கவிதை, கட்டுரை நாடகம், சுலோகம் புனைதல் ஆகியவற்றில் போட்டிகள் நடத்தப்படும். விஷயதானங்களை இம்மாதம் 20-ந் திகதிவரை தமக்கு அனுப்பலாமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# “வீட்டுக்காரருக்குச் சொன்னதும் வீட்டை மாற்றிவிடுவார்கள்”

## மண்கும்பான் பெண்கடத்துவழக்கில் இளம் பெண் சாட்சியம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

“முதலாம் எதிரி இராசதுரையுடன் எட்டு நாட்கள் இருந்தேன் அவர் முதல் நாள் இரவும், மறுநாள் இரவும் தான் என்மீது பலாத்காரம் புரிந்தார் மற்றும் நாட்களில் ஒன்றும் நடக்கவில்லை எனக்கு வயிற்றுக் குத்துவதது சுகவீனமாக இருப்பேன் நான் தங்கியிருந்த வீட்டுக்காரர்சோடா வாங்கிவந்தார். ஆயுர்வேத வைத்தியர் ஒருவரும் வந்து என்கையைப் பிடித்துப்பார்த்தார். அவருக்கு நடந்தவற்றை சொன்னேன்”

மண்கும்பான் பெண்கடத்தல், பலாத்கார வழக்கில் சாட்சியமளித்த 17 வயதான முத்துத்தம்பி நாகேஸ்வரி மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு விசாரணை யாழ் பகுதி அசைஸ்கோர்ட்டில் நீதிபதி ஏ. சி. அலஸ் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வழக்கில் ஊர்காவற்றுறைப் பகுதியைச் சேர்ந்த மண்கும்பானில் 1969-ம் ஆண்டு ஏப்ரல் 18-ம் திகதி செல்லையா இராசதுரை, செல்லையா பாலசிங்கம், செல்லையா பேரம்பலம், வேலுப்பிள்ளை பொன்னுத்துரை, தியாகராசா தவநாயகம் ஆகியோர் சட்டவிரோதமாக கூட்டம் கூடி, முத்துத்தம்பி நாகேஸ்வரியைக் கடத்தியதாகவும், 1-ம் எதிரியான இராசதுரை நாகேஸ்வரிமீதுபலாத்காரம் புரிந்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

எதிரி சார்பில் அட்வகேட் ஜே. ஏ. பி. செரீபும், புறக்டர் ஆர். விஸ்வநாதன், புறக்டர் வி. யோகேஸ்வரன் ஆகியோரின் அனுசரணையுடனும், ஆஜரானார் எதிரிக்காக அரசாங்கத்தால் வழக்கறிஞர் கே. எஸ். முத்துக்குமாரு நியமிக்கப்பட்டிருந்தார் முடிக்குரிய தரப்பில் அட்வகேட் யூ யாப்பா ஆஜரானார்.

### 3-ம் எதிரி காலைப்பிடித்தார்

முத்துத்தம்பி நாகேஸ்வரி சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

சம்பவம் நடந்ததினம் 2-ம் எதிரியான பாலசிங்கம் என் தகப்பனாரைக் கட்டிப் பிடித்தார். அப்பொழுது முதலாம்எதிரி என்னை வீட்டு முற்றத்திற்கு இழுத்துக் கொண்டு போனார். வீட்டுக் கதவு திறந்திருந்தது 3-ம் எதிரி எனது காலைப் பிடித்தார் நான் ஐயா, ஐயா என்று குளறினேன். 2-ம் எதிரி ஓடிவந்து என் வாய்க்குள் சேலையை அடைத்தார்.

### படலையில் கார்

கார் ஒன்று படலையடியில் நிறுத்தப்பட்டிருந்தது. என்னைக் காருக்கு கொண்டு போனார்கள் காரில் அந்நேரம் சாரதி இருந்தார். அவரை எனக்குத்தெரியாது. என்னைக் கார் சீட்டுக்குக் கீழே இருத்தினார்கள். 1-ம் எதிரி வாயைப் பொத்தினார் 2-ம், 3ம் எதிரிகள் காரில் ஏறினார்கள். 1-ம் எதிரி காரில் ஏறி இருந்தார் 4-ம், 5-ம் எதிரிகள் கார் புறப்படும் போது “நாங்கள் போய் விட்டு வாரோம்” என்றார்கள். அப்பொழுது தான் முதல் தடவையாக 4-ம், 5ம் எதிர்களை கண்டேன் அவர்கள் இருவரும் எனக்கொன்றும்செய்யவில்லை, அதன்பின் கார் புறப்பட்டது. ஒரு வீட்டுக்கு என்னைக் கொண்டு சென்றார்கள், அந்த வீட்டுக்காரரை எனக்குத் தெரியாது. அந்த வீட்டிற்குப் போக கொஞ்சத்தூரம் நடக்க வேண்டியிருந்தது.

### மாமா, மாமா என்று கூப்பிட்டார்

1-ம் எதிரி வீட்டிற்கு என்னுடன் வந்தார் காரை அதன்பின் காணவில்லை படலையடியில் நின்று ‘மாமா மாமா’ என்று 1ம் எதிரி கூப்பிட்டார். அப்பொழுது முதலாம் எதிரி என்னை இழுத்துக்கொண்டு போனார். என் மனதுக்கு விருப்பமில்லாமல் அவருடன் போனேன். என் கையில் பிடித்தபடி பலாத்காரமாக இழுத்துக்கொண்டுபோனார். வீட்டிலிருந்து ஓர் ஆடவர் வெளியில் வந்தார். அவரை எனக்குத் தெரியாது. 1ம் எதிரி அவருடன் கதைத்தார். அவர் படலையைத் திறந்து எங்களைக் கூட்டிச் சென்றார். நான் அழுது கொண்டு போனேன்.

### 1ம் எதிரி மௌனம்

நான் அழுவதைக் கண்டு ‘ஏன் இப்படிக் கூட்டிவந்தாய்?’ என்று அவர் 1ம் எதிரியிடம் கேட்டார். 1ம் எதிரி மௌனமாக இருந்தார் அந்த வீட்டில் ஒரு அறையில் தங்கியிருந்தோம் இரவு 11 மணிக்கு அங்கு போனோம். நல்ல இருட்டு. வீட்டில் லாம்பு இருந்தது. அறைக்குள் அந்த வீட்டுப் பெண் பாய் கொண்டுவந்து போட்டார் நான் உள் சட்டையும் மேல் சட்டையும் போட்டிருந்தேன். மேல் சட்டையைக் கழட்டினார். பாயில் என்னைப் படுக்கச் சொல்லி அடித்தார். அதன் பின் பலாத்காரம் புரிந்தார் 2ந் தடவை பலாத்காரம் புரிய முயன்றார். நான் இடம் கொடுக்கவில்லை. அழுது கொண்டிருந்தேன். அதன்பின் அவர் பாயில் படுத்திருந்தார். நானும் அதே பாயில் படுத்திருந்தேன். அறைக்கு வெளியில் போக எனக்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

நீதிபரசர்: கதவைத் திறந்து ஓட ஏன் எத்தனிக்கவில்லை?

நாகேஸ்வரி: கதவைத் திறக்க 1ம் எதிரி விடவில்லை மறுநாள் காலை என்னை முகம் கழுவும்படி சொன்னார். நான் அழுதுகொண்டு முகம் கழுவச் சென்றேன் அந்த வீட்டில் குழந்தைகளும் இருந்தார்கள். அந்த வீட்டுப் பெண்ணுக்கு நடந்தவற்றைச் சொன்னேன். அவர் ஒன்றும் செய்யவில்லை இடியப்பம் கொண்டுவந்து தந்தார். 1ம் எதிரியும் முகம் கழுவினார். அவர் முதலில் கழுவிவிட்டு வந்தபின் நான் முகம் கழுவச் சென்றேன்.

நீதிபரசர்: அந்த நேரத்தில் ஓடிப்போகக்கூடிய நிலையில் இல்லையா?

நாகேஸ்வரி: அவர் விடவில்லை

நீதிபரசர்: கிணற்றடிக்கு தனியாகத்தானே போனீர்?

நாகேஸ்வரி: ஆம், 1ம் எதிரி என்னைப் பார்த்துக் கொண்டிருந்தார். வீட்டிற்கு வந்ததும் தேநீர் தந்தார்கள். நான் குடித்தேன்.

### இடியப்பம் சாப்பிடவில்லை

எனக்கு இடியப்பம் தந்தார்கள். நான் சாப்பிடவில்லை. என்னைப் பலாத்காரமாகக் கொண்டுவந்தபடியால் கவலையில் இடியப்பம் சாப்பிடவில்லை. 1ம் எதிரி சாப்பிட்டார். மத்தியானம் சோறு தந்தார்கள். நான் சோறும் சாப்பிடவில்லை அப்போது 1ம் எதிரி இருந்தார் வீட்டுப் பெண்ணும் இருந்தார் கணவன் இருக்கவில்லை

### மாமி என்று கூப்பிட்டார்

2ம் எதிரி அன்று வீட்டுக்கு வந்தார் வீட்டுக்காரப் பெண் அவரிடம் என்னைக் கொண்டு போகச் சொன்னார். 2ம் எதிரி கார் கொண்டுவந்து என்னை வேறு வீட்டிற்குக் கொண்டுசென்றார். 1ம் எதிரியும் வந்தார் நான் மன விருப்பத்துடன் போகவில்லை 1ம் எதிரி என்னை இழுத்துக்கொண்டு போய்க் காரில் ஏற்றினார். முதல் நாள் வந்த கார் வேறு, இந்தக் கார் வேறு. கார் போய் ஒரு வீட்டில் நின்றது. 2ம் எதிரி ‘மாமி’ என்று கூப்பிட்டார், மாமி வந்து எங்களைக் கூட்டிக் கொண்டு சென்றார். விருப்பமில்லாமல்தான் நான் போனேன் எட்டு நாளும் நான் அழுதுகொண்டுதான் இருந்தேன்.

### தேநீர் குடித்தேன்

அந்த வீட்டிலுள்ள ஓர் அறைக்கு இராசதுரை கூட்டிச் சென்றார். அங்கும் 2ம் எதிரியும் இருந்தார். அங்கு தேநீர் குடித்தேன். பின் 2ம் எதிரி சென்றுவிட்டார். 1ம் எதிரி மட்டும் என்னுடன் அந்த அறைக்குள் இருந்தார். இருவரும் தனியாக இருந்தோம். இரவு முழுவதும் அந்த அறையில் இருந்தோம்.

நீதிபரசர்: ஒரு முறையும் வெளியில் செல்லவில்லை?- ஆம்

### பாயில் படுத்தார்

அப்பொழுது வீட்டுக்காரப் பெண் பாய் கொண்டு வந்து தந்தார். 1ம் எதிரி அந்தப் பாயில் படுத்திருந்தார். அவர் கதவை உள்ளுக்குப் பூட்டியிருந்தார் வெளியில் செல்ல முடியாமல் போய்விட்டது எனக்குத் திக்குத்திசை தெரியவில்லை. தெரிந்திருந்தால் ஓடியிருப்பேன் அன்றிரவும் இராசதுரை எனக்கு விருப்பமில்லாமல் என்மீது பலாத்காரம் புரிந்தார்.

நீதி: எப்படி விருப்பமில்லாமல் பலாத்காரம் புரிந்தார்?

நாகேஸ்வரி: அடிப்பதாக பயமுறுத்தி பலாத்காரம் செய்தார். இந்த தடவையும் ஒரே மாதிரித் தான் 1ம் எதிரி என்மீது பலாத்காரம் புரிந்தார். அன்றிரவு 1ம் எதிரி வெளியில் செல்லவில்லை

நீதி: நெடுகவும் பட்டினி கிடந்து வந்திருக்கிறீர்?

நாகேஸ்: ஆம் பிரபு ஆறு ஏழு நாள் பட்டினி கிடந்ததால் பெரிய ஆஸ்பத்திரியில் 14 நாட்களிருந்தேன். காலையில் தேநீர் தந்தார்கள் குடித்தேன்

நீதி: தண்ணீர்ப் பதார்த்தம்தான் குடித்தீர்?

நாகேஸ்: ஆம் பிரபு எட்டு நாளும் தேநீர்தான் குடித்தேன். 2 நாட்கள்தான் பலாத்காரம் செய்தார்.

நீதி: மற்ற நாட்களில் ஏன் பலாத்காரம் நடக்கவில்லை?

நாகேஸ்: எனக்கு சுகமில்லை வயிற்றுக் குத்து 1ம் எதிரிக்குச் சொன்னேன்.

நீதி: 8 நாளில் வேறு வீட்டிற்குக் கொண்டுபோனாரா?

நாகேஸ்: ஆறு அல்லது ஏழு வீடுகளுக்குக் கொண்டு போனார்.

ஒவ்வொரு வீட்டிலும் ஒரு நாள்தான் இருந்தேன் நான் அழுது வீட்டுக்காரருக்குச் சொன்னதும் மறுநாள் என்னைக் கூட்டிச் செல்லும்படி வீட்டுக்காரர்கள் சொன்னார்கள். 2-ம் நாள் பாலசிங்கம் இடியப்பம் வாங்கி வந்தார். அவரின் மனைவியும் வந்தார்.

### சேலை கட்டினார்கள்

பாலசிங்கம் மனைவி என்னுடன் கதைக்கவில்லை. நானும் கதைக்கவில்லை. அன்று பின்னேரம் பாலசிங்கம் மனைவி கட்டாயப்படுத்தி எனக்கு சேலை கட்டினார் என்னை வேறு வீட்டிற்குக் காரில் கூட்டிச் சென்றார்கள். காரில் 1-ம் எதிரியும் பாலசிங்கமும் அவரின் மனைவியும் இருந்தார்கள்

### சோடா தந்தார்

3ம் வீட்டுச் சொந்தக்காரரை எனக்குத் தெரியாது. அன்று எனக்குச் சுகமில்லை வீட்டுக்காரர் எனக்குச் சோடா கொண்டுவந்து தந்தார் மறுநாள் வேறு வீட்டிற்குப் போனோம் 4ம் நாள் இராசதுரை என்பவருடைய வீட்டிற்குப் போனோம். அந்த வீடு யாழ்ப்பாணத்தில் இருக்கிறது. பேரம்பலம் வந்து என்னை வேறு வீட்டிற்குக் கூட்டிப் போனார் 1ம் எதிரியும் வந்தார் அந்த வீடு யாருடையதென்று தெரியாது

### எனக்கு சுகமில்லை

காரில் அந்த வீட்டிற்குப் போனோம். நான் அங்கு சுகமில்லாமல் படுத்திருந்தேன் அப்போது ஒருவர் வந்தார். என்னை பலாத்காரமாகக் கூட்டிவந்ததாகவும், எனக்குச் சுகமில்லையென்றும் அவரிடம் கூறினேன். இப்போ அவரைத் தெரியும். அவர் ஒரு ஆயுர்வேத வைத்தியர் எனது கையைப் பிடித்துப் பார்த்தார். அதன் பின் சென்றுவிட்டார்.

### மாட்டுக் கொட்டிலில்

அடுத்தநாள் மற்றொரு வீட்டில் இருந்தேன். சுகமில்லாமல் இருந்தேன் பேரம்பலம் வந்து, பொலிசார், இராமசேவகரை கூட்டிப் போய்விட்டதாகவும் இங்கு வரப்போவதாகவும் வீட்டுக்காரப் பெண்ணிடம் கூறினார். எங்களுக்குரிய வீண் கரைச்சல் என்று அப்பெண் என்னைக் கலைத்துவிட்டார்” இராசதுரையும் பேரம்பலமும் என்னை ஒரு மாட்டுக் கொட்டிலுக்கு கொண்டு சென்றனர். இராசதுரை என்னை இழுத்துச் சென்றார் பொலிசார் நண்பகலில் வந்து என்னையும் 1ம் எதிரியையும் கைதுசெய்தார்கள்.

### வைத்திய சோதனை

பொலிசார் என்னைக் காரில் ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டுசென்றனர். நான் வாக்குமூலமளித்தேன் வைத்திய சோதனைக்கு என்னை டாக்டரிடம் அனுப்பினார்கள். டாக்டரிடம் ஒன்றும் சொல்லவில்லை. என்ன நடந்தென்று அவர் கேட்கவில்லை. டாக்டர் காயங்களைப்பார்த்தார். எப்படி காயமேற்பட்டது என்று கேட்டார். பலாத்காரம் செய்ததால் வந்ததென்றேன்.

நீதிபரசர்: 1ம் எதிரிசொந்தமா?- இல்லை

நீதி: அந்தக் கிராமத்தில் இருப்பவர்?- ஆம்

நீதி: எவ்வளவுகாலமாகத் தெரியும்?- பள்ளியில் படிக்கும்போதுதெரியும்

நீதி: உமக்கும் அவருக்கும் திருமணப்பேச்சு நடந்ததா? இல்லை

எதிரிசார்பில் ஆஜரான அட்வகேட் ஜே ஏ பி செரீபும் சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்தார். விசாரணை தொடர்ந்துநடைபெறுகிறது.


## 28-வது மகாஜன சம்பத விசேட பரிசுகள்

1-ம், 2-ம், 3-ம் பரிசுகளுக்குரிய டிக்கெட்டுகளுக்கும் உரியவர்கள் தேசிய லொத்தர் சபையிடம் ரூபா 1000/- செலுத்தி ஒரு கறைச் சேலையைப் பரிசாகப் பெறலாம்.

மேலும் முதல் 3 பரிசுகளையும் பெறும் டிக்கட்டுகளுக்கு முன்னுள்ள 5 டிக்கெட்டுகளுக்கும் முதல்மூன்று பரிசுகளையும் பெறும் டிக்கட்டுகளை அடுத்துள்ள 5 டிக்கட்டுகளுக்கு முரியவர்கள் ரூபா 200/- தேசிய லொத்தர் சபையிடம் செலுத்தி தங்க, வெள்ளி, ஜரிகை வேலைப்பாடமைந்த தூய மணிப்புரி பட்டுச் சேலை ஒன்றைப் பரிசாகப் பெறலாம்.

பரிசு பெறுகின்ற டிக்கட்டுகள் உட்பட அதன் இலக்கத் தொடரைச் சேர்ந்துவரும் 100 டிக்கட்டுகளுக்கு லொத்தர் சபைக்கு ரூபா 300/- க்கு மேற்படாமல் செலுத்தினால் குறிப்பிடப்படாத ஒரு கைக்கடிகாரத்தைப் பரிசாகப்பெறலாம்.

இவற்றைவிட பரிசு பெறும் டிக்கட்டுகள் உட்பட இவ்விலக்கத்தில் தொடர்பாக வரும் ஆயிரம் டிக்கட்டுகளுக்கும் ஆறாவது அதிர்ஷ்டம் பெற்ற 203 டிக்கட்டுகள் உட்படப் பின்வரும் பொருள்கள் பரிசாகக் கிடைக்கும். ரூபா 65/- க்கு காஷ்மீர் அச்சடி சில்க் சாறி. ரூபா 60/- க்கு போடர் போட்ட காஷ்மீர் பிளெயின் சில்க் சாறி. ரூபா 45/- க்கு ஆர்ட் சில்க் சாறி. ரூபா 30/- க்கு பருத்தி டக்கா சாறி. ரூபா 15/- க்கு பருத்தி அச்சடி வோயில் சாறி. ரூபா 20/- க்கு பருத்தி பழைய காட் வெள்ளை சாரம். ரூபா 18/- க்கு பருத்தி பழைய காட் நிற சாரம், ரூபா 42/- க்கு ஆர்ட்சில்க் வேட்டி- ஆர்ட்சில்க் சால்வையுடன், ரூபா 30/-க்கு சால்வையின்றி ஆர்ட்சில்க் வேட்டி, ரூபா 22/50 க்கு பருத்தி சால்வையுடன் பருத்தி வேட்டி, ரூபா 15/- க்கு சால்வை இல்லாமல் பருத்தி வேட்டி பரிசுப்பொருள்களுக்குரிய பணம் தேசிய லொத்தர் சபைக்கு செலுத்தப்படவேண்டும்.

எம்மிடம் குறிப்பிட்ட அளவு கையிருப்பேயுள்ளதால் மேற்குறிப்பிட்ட விசேஷ பரிசுகள் “முதல் வருபவருக்கு முதல் தருவது” என்ற அடிப்படையில் 1971 ஆகஸ்ட் 2-ம் திகதி முதல் ஆகஸ்ட் 14-ம் திகதி வரை நாளொன்றுக்கு 200 பேருக்கு விதம் வழங்கப்படும். இவர்கள் தினமும் 200 அடையாளச் சின்னங்கள் வழங்குவதன்மூலம் தெரிவுசெய்யப்படுவர். ஒருவர் ஒருநேரத்தில் ஒரு டிக்கட்டையே கையளிக்க முடியும்.

### தேசிய லொத்தர் சபை

